©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 46] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 25, 2009
கார்த்திகை 9, திருவள்ளுவர் ஆண்டு–2040

## பகுதி VI—பிரிவு 1 இன் இணைப்பு

### துறைத் தலைவர்களுடைய அறிவிப்புகள்

**தஞ்சாவூர் மாவட்ட கல்வித் துறை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தின் முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் நிதி முறைகேடுகள் செய்ததற்காக நிரந்தர தகுதியிழப்பு செய்தல் குறித்த அறிவிப்பு.**

*[ந.க.எண் 3076/2008/ச.ப.(2).]*

முறைகேடு இனம் 1, 2, 3, 4, 5, 6, 7, 8 (மற்றும்) 9 ஆகிய இனங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஓட்டி 1890 தஞ்சாவூர் மாவட்ட கல்வித் துறை ஊழியர்கள் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தின் முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் உணர்வறிந்தே கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், விதிகள் மற்றும் சங்க துணை விதிகளுக்கும் புறம்பாக செயல்பட்டு ''நம்பிக்கைக்கு ஊறு விளைவித்தல்'' மற்றும் ''தவறாக நிர்வாகம் செய்தல்'' ஆகிய பிறல்நெறிகளுக்கும் மற்றும் சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்படவும் காரணமாக இருந்துள்ளனர். மேலும் நிதிமுறைகேடுகள் நடைபெறவில்லை என்பதை முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் யாரும் மறுக்கவில்லை.

எனவே ஓட்டி 1890 தஞ்சாவூர் மாவட்ட கல்வித் துறை ஊழியர்கள் கூட்டுறவுச் சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தின் முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினர்களாகிய—

*திருவாளர்கள்—*

| | | | |
|---|---|---|---|
| 1. | மு. வீரையன் | .. | முன்னாள் தலைவர் |
| 2. | இரா. சுவாமிநாதன் | .. | முன்னாள் இயக்குநர் |
| 3. | ஆர். துரைராஜ் | .. | முன்னாள் இயக்குநர் |
| 4. | வெ. ரூபாவதி | .. | முன்னாள் இயக்குநர் |
| 5. | சி. பாலன் | .. | முன்னாள் இயக்குநர் |
| 6. | மு. நாகராஜன் | .. | முன்னாள் இயக்குநர் |
| 7. | என். மேரி கிரேஸ் பாலாமணி | .. | முன்னாள் இயக்குநர் |

DTP—VI-1 (T-Sup.) (46)

ஆகிய 7 நபர்களையும் தஞ்சாவூர் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 (தமிழ்நாடு சட்டம் 30/1983), 36 ஆவது பிரிவில் சொல்லப்பட்டுள்ள "நம்பிக்கைக்கு ஊறு" மற்றும் "தவறாக நிர்வாகம் புரிதல்" ஆகிய இரண்டு பிறல்நெறிகளுக்கும் காரணமாக இருந்துள்ளார்கள் என்று தெரியவந்துள்ளதால் மேலே குறிப்பிட்டுள்ள முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் அனைவரும் எதிர்காலத்தில் ஒட்டி 1890 தஞ்சாவூர் மாவட்ட கல்வித் துறை ஊழியர்கள் கூட்டுறவுச் சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தின் நிர்வாகத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர் மற்றும் எந்தவொரு அலுவலகம் பொறுப்பாளர் பதவியையோ அல்லது பதிவு செய்யப்பட்ட வேறு எந்தவொரு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்திலோ அல்லது அலுவலகப்பொறுப்பிலோ இனிமேற்கொண்டு வரும் காலங்களில் பதவி வகிப்பதிலிருந்து நிரந்தரமாகத் தகுதியின்மை (Permanent disqualification) செய்து இதன் வழி ஆணையிடப்படுகிறது.

தஞ்சாவூர்,
2009 நவம்பர் 4.

**க. சிவாஜி,**
*கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.